"THE NEW INDIAN EXPRESS"

PAGE NO: 03

DATE: 24.07.21

**Pondicherry University cancels semester exam**

Puducherry: Pondicherry University decided to cancel all semester exams for the first and second years students. In a statement from Pondicherry University, Controller of examinations in-charge, Professor D Lazar on Friday stated that the first year students' semester exam which was scheduled on July 26, now stands cancelled. Results will be assessed based on internal marks. Even semester exams for the final year students will be held online, for which schedule will be published shortly. For the first and second year UG students and the first year of PG courses will be assessed based on internal marks and there will be no exams. ENS

"THE TIMES OF INDIA"

PAGE NO: 06

DATE: 24.07.21

# PU allows UG, diploma courses in Lakshadweep

TIMES NEWS NETWORK

Pondicherry University has given its nod to Lakshadweep to offer two undergraduate vocational courses and four one-year diploma courses from the academic year 2021-22 in two colleges proposed by the territorial administration.

Lakshadweep will offer BSc courses in tourism and service industry and software development and a one-year diploma course in catering and hospitality at a college proposed at Kadmat Island. The administration will offer diploma courses in marine engineering, electrical and electronics and mechanical in a college at Minicoy. All courses have 30 seats each.

DINAKARAN

PAGE NO : 05

DATE : 24.07.21


# PONDICHERRY UNIVERSITY

(A Central University – Accredited with "A" Grade by NAAC)

R.V. NAGAR, KALAPET, PUDUCHERRY – 605 014

# ADMISSIONS OPEN 2021 – 22

## REGULAR COURCES

Applications are invited for

- M.A./ M.Sc./ M.Com./ MCA/ M.Tech./ MBA/ M.Lib.I.S./ M.Ed./ M.P.Ed./ MSW/ MPA/ LL.M Programmes
- Five Year Integrated P.G. Programmes
- Ph.D. Programmes
- P.G. Diploma Programmes

Applications are to be submitted online. **Mode of exam:** Online based entrance examination at designated centres.

### IMPORTANT DATES

| | |
|---|---|
| Online Registration Starts on | 19th July 2021 |
| Last Date for Online Registration | 14th August 2021 |
| Dates of Entrance Examination | 02nd, 03rd & 04th September 2021 |

All dates given above may change subject to position of COVID-19

davp 21232/11/0006/2122

For further details including courses offered, eligibility, reservation policy and scholarship, please refer to the Prospectus 2021-22 hosted in the University website **www.pondiuni.edu.in**

Date: 19.07.2021

REGISTRAR(i/c.)

***www.pondiuni.edu.in***

"DINAMALAR"

PAGE NO: 01

DATE: 24.07.2021

# ரத்து

## • கல்லூரிகளில் செமஸ்டர் தேர்வு...
## • புதுச்சேரி பல்கலை கழகம் அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 24–**

**கலை, அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டு தவிர்த்து பிற மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வை புதுச்சேரி பல்கலைக்கழகம் ரத்து செய்துள்ளது.**

நாடு முழுவதும் கொரோனா இரண்டாவது அலை வேகமெடுத்ததால், முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அனைத்து கல்வி நிறுவனங்களும் மீண்டும் மார்ச் மாதம் மூடப்பட்டது. மாணவர்களின் நலன் கருதி புதுச்சேரி பல்கலை நிர்வாகமும் மார்ச் மாதம் முதல் அனைத்து தேர்வையும் தள்ளி வைத்தது

தற்போது கொரோனா தொற்று குறைந்துள்ளதால், ஊரடங்கு படிப்படியாக தளர்த்தப்பட்டுள்ளது. அதனால், இணைப்பு கல்லூரி மாணவர்களுக்கு செமஸ்டர் தேர்வை மீண்டும் நடத்த புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆயத்த பணிகளை முடுக்கிவிட்டது.

அதன்படி கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு ஜூலை மற்றும் ஆகஸ்டில் அடுத்தடுத்து செமஸ்டர் தேர்வுகள் நடைபெற இருந்தன.

இந்நிலையில் பல்கலை தேர்வு ஆணையர் லாசர், புதுச்சேரி மத்திய பல்கலையில் இணைக்கப்பட்ட கலை, அறிவியல் கல்வி நிறுவனங்களில் படிக்கும் இறுதியாண்டு மாணவர்களை தவிர்த்து, பிற மாணவர்களுக்கான தேர்வுகளை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

இளநிலை (யு.ஜி.,) பிரிவில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் முதுநிலை பிரிவில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு உள்மதிப்பீடு கொண்டே மதிப்பீடு செய்யப்படும். தனியாக தேர்வு ஏதும் நடத்தப்படாது. இருப்பினும் அனைத்து இளநிலை, முதுநிலை மாணவர்களும் தேர்வு கட்டணம் கண்டிப்பாக செலுத்த வேண்டும்.

### யாருக்கெல்லாம் பயன்

பல்கலையில், ஒன்று, மூன்று மற்றும் ஐந்தாம் செமஸ்டர்களை 'ஆட் – ஆன்' (ஒற்றை பருவ) தேர்வு என்றும், இரண்டு, நான்கு மற்றும் ஆறாம் செமஸ்டர் தேர்வுகளை 'ஈவன் செமஸ்டர்'(இரட்டை பருவ) தேர்வுகள் என பிரித்து நடத்துகிறது.

மாற்றியமைக்கப்பட்ட கல்வியாண்டின்படி மார்ச் மாதத்தில் ஒற்றை பருவ தேர்வுகள் நடத்தப்படும். இதன்படி இரண்டாம் ஆண்டு மாணவர்கள், மூன்றாம் பருவ தேர்வையும், இறுதியாண்டு மாணவர்கள் ஐந்தாம் செமஸ்டரையும் ஏற்கனவே எழுதி விட்டனர்.

முதலாமாண்டு மாணவர்கள் மட்டு'ம் இன்னும் முதல் செமஸ்டர் தேர்வை எழுதவில்லை. எனவே முதலாமாண்டு மாணவர்களுக்கு முதல் செமஸ்டர் மட்டும் உள் மதிப்பீடு அடிப்படையில் தேர்ச்சி அறிவிக்கப்பட உள்ளது.

இதேபோல், இரண்டு, நான்கு, ஆறாம் உள்ளிட்ட 'ஈவன் செமஸ்டர்' மாற்றியமைத்த கல்வியாண்டின்படி, ஆகஸ்ட்டில் நடைபெற உள்ளது. இதில் இறுதியாண்டு மாணவர்களுக்கான ஆறாம் செமஸ்டர் கட்டாயம் ஆன்–லைனில் எழுத வேண்டும் என பல்கலை மானியக் குழு உத்தரவிட்டுள்ளது.

எனவே மீதமுள்ள இரண்டு, நான்கு செமஸ்டர் தேர்வுகள் உள்மதிப்பீடு அடிப்படையில் தேர்ச்சி அறிவிக்கப்பட உள்ளது. பல்கலை நிர்வாகத்தின் இந்த அறிவிப்பு, கலை, அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 25 ஆயிரம் மாணவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### அரியர் மாணவர்கள் கதி

முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு தேர்வு ரத்தினை அறிவித்த பல்கலைக்கழகம் அரியர் தேர்வு குறித்து இன்னும் தெளிவுப்படுத்தவில்லை.

தேர்வு ரத்து அறிவிப்பு, அரியர் வைத்துள்ள மாணவர்களுக்கு பொருந்துமா என்பதை பல்கலை நிர்வாகம் அறிவிக்க வேண்டும்.

HINDU TAMIL

PAGE NO : 05 DATE : 24.07.21

கலை, அறிவியல் கல்லூரிகளில்

# இறுதியாண்டுக்கு மட்டுமே ஆன்லைனில் தேர்வு

● புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் அறிவிப்பு

■ புதுச்சேரி

கலை, அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டுக்கு மட்டுமே ஆன்லைனில் செமஸ்டர் தேர்வுகள் நடத்தப்படும். பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பில் இதர ஆண்டுகளுக்கு செமஸ்டர் தேர்வில்லை. அகமதிப்பீட்டு முறையில் மதிப்பெண்கள் தரப்படும் என்று புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.




புதுச்சேரியில் கல்லூரி தேர்வுகள் தொடர்பாக தெளிவான நடைமுறை வெளியிடப்படாமல் இருந்தது. இதைத்தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் ஆன்லைனில் தேர்வு நடத்துமாறு பல்கலைக்கழகத்துக்கு கல்வியமைச்சர் நமச்சிவாயம் கடிதம் எழுதினார். இதையடுத்து கடந்த 19-ம் தேதி முதல் அனைத்து தியரி தேர்வுகளும் ஆன்லைன் முறை மூலம் நடத்தப்படும் என்று பல்கலைக்கழகம் தெரிவித்திருந்தது. அதன்படி இறுதியாண்டு தேர்வுகள் பலதுறைகளில் தொடங்கியது.

கல்லூரி முதல்வர்கள் வினாத்தாள்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புவார்கள். மாணவர்கள் ஏ4 அளவு வெள்ளை காகிதத்தில் கருப்பு மை கொண்டு எழுதலாம். 3 மணி நேர காலத்திற்குப் பிறகு மாணவர்கள் எழுதிய விடைத்தாளை ஸ்கேன் செய்து கல்லூரி முதல்வருக்கு 30 நிமிடங்களுக்குள் அனுப்பலாம்.

கல்லூரி முதல்வர்கள் விடைத்தாள்களை நகலெடுத்து முதல் பக்கத்தில் கல்லூரி முத்திரையை இட்டு அதே நாளில் பல்கலைக்கழகத்துக்கு விடைத்தாளை அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டாளர் லாசர், அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பியுள்ள உத்தரவில், "இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கான செமஸ்டர் தேர்வுகள் ஆன்லைனில் நடத்தப்படும். பட்டப்படிப்பில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் பட்டமேற்படிப்பில் முதலாமாண்டு செமஸ்டர் வரும் ஜூலை 27 முதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தன. அவர்களுக்கான செமஸ்டர் தேர்வுகள் ரத்து செய்யப்படுகின்றன. அவை அகமதிப்பீட்டு முறையில் மதிப்பெண்கள் மதிப்பீடு செய்யப்படும். அதேநேரத்தில் இம்மாணவர்கள் தேர்வுகளுக்கு பதிவு செய்ய வேண்டும். அதேபோல் தேர்வுக் கட்டணம் உட்பட அனைத்து விஷயங்களையும் ஏற்கெனவே தரப்பட்டுள்ள அட்டவணைப்படி பின்பற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பல்கலைக்கழகத்தரப்பில் விசாரித்தபோது, "இவ்வுத்தரவானது முழுக்க கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொறியியல், மருத்துவப் படிப்புகளுக்கு பொருந்தாது. யூஜிசி வழிகாட்டுதல் அடிப்படையில் இவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தப்படுகிறது" என்று குறிப்பிட்டனர்.

"DINAMANI"

PAGE NO: 02

DATE: 24.07.21

# புதுச்சேரியில் கல்லூரி இறுதியாண்டுக்கு மட்டுமே தேர்வு

## இதர ஆண்டுகளுக்கு ரத்து

**புதுச்சேரி, ஜூலை 23:** கலை, அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டுக்கு மட்டுமே பருவத் தேர்வுகள் இணையதளத்தில் நடத்தப்படும் என்றும், இதர ஆண்டுகளுக்கு பருவத் தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாகவும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் அறிவித்தது.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் கீழ் 90-க்கும் மேற்பட்ட உறுப்புக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். கடந்த 19-ஆம் தேதி முதல் அனைத்து எழுத்துத் தேர்வுகளும் இணையதளம் வழியே நடத்தப்படும் என பல்கலைக்கழகம் அறிவித்தது. அதன்படி, இறுதியாண்டு தேர்வுகள் பல துறைகளில் தொடங்கியது. இந்த நிலையில், பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் டி.லாசர், அனைத்து கல்லூரிகளுக்கும் வெள்ளிக்கிழமை அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியுள்ளதாவது:

பல்கலைக்கழக நிதி நல்கை குழுவின் (யூஜிசி) வழிகாட்டுதலின்படி, இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கான பருவத் தேர்வுகள் இணையதளத்தில் நடத்தப்படும். பட்டப்படிப்பில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு, பட்ட மேற்படிப்பில் முதலாமாண்டு பருவத் தேர்வுகள் ரத்து செய்யப்படுகின்றன. அந்தத் தேர்வுகளுக்கு அகமதிப்பீட்டு முறையில் மதிப்பெண்கள் மதிப்பீடு செய்யப்படும்.

அதே நேரத்தில், முதலாம், இரண்டாமாண்டு மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்துதல், தேர்வுக்கு விண்ணப்பித்தல் உள்பட அனைத்து விஷயங்களையும் ஏற்கெனவே தரப்பட்டுள்ள அட்டவணைப்படி பின்பற்ற வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"DINAKARAN"

PAGE NO: 01

DATE: 24.07.2021

# புதுவை பல்கலையில் செமஸ்டர் தேர்வு ரத்து

**புதுச்சேரி, ஜூலை 24:** புதுவையில் உள்ள கலை, அறிவியல் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களை தவிர்த்து மற்றவர்களுக்கு செமஸ்டர் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாக மத்திய பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் கொரோனா தொற்று பரவல் காரணமாக பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. கல்லூரி தேர்வுகள் தொடர்பாக தெளிவான நடைமுறை வெளியிடப்படாமல் இருந்தது. இதனால் மாணவர்கள் ஆன்-லைனில் தான் செமஸ்டர் தேர்வு நடத்த வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில்

9ம் பக்கம் பார்க்க